# <u>கீழக்கரை நகர்மன்ற 16.08.2019–ம் தேதிய கூட்டத்தின் நடவடிக்கைகள்</u>

## <u>பொருள் :1</u>

**தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் உட்கட்டமைப்புத் திட்டம் (TURIP)** 2019–20ன் கீழ் நகராட்சிப் பகுதிகளில் சாலைப்பணிகள் மேற்கொள்ளும் பொருட்டு திட்டக்கருத்துரு அனுப்புமாறு மதுரை, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரக 28.05.2019–ம் தேதிய RDMA Group Whats App. செய்தியில் தெரிவிக்கப்பட்டது. மேற்காணும் செய்தியின் அடிப்படையில் இந்கராட்சிப் பகுதியில் ரூ.250.00 லட்சத்திற்கு 3200 கி.மீட்டருக்கு தார்ச்சாலைகள் மற்றும் ரூ.200.00 லட்சத்திற்கு 2500 கி.மீட்டருக்கு பேவர்கல் சாலைகள் அமைக்கும் பொருட்டு மொத்தம் 5700 கி.மீட்டருக்கு ரூ. 450.00 லட்சத்திற்கு மதிப்பீடுகள் தயார் செய்து 29.05.2019–ம் தேதி சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு வழிமுறையாக கருத்துரு அனுப்பப்பட்டது.

மேற்காணும் கருத்துருவின் மீது சென்னை நகராட்சி நிர்வாக ஆணையரகத்தில் உரிய நடவடிக்கை மேற்கொண்டு, கீழக்கரை நகராட்சிக்கு **தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் உட்கட்டமைப்புத் திட்டம் (TURIP)** 2019–20ன் கீழ் ரூ.200.00 லட்சத்தில் பணிகள் மேற்கொள்ள ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் அதற்குரிய விரிவான திட்ட மதிப்பீடு தயார் செய்து 19.08.2019ம் தேதிக்குள் கருத்துரு அனுப்பி வைக்குமாறு மதுரை, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் 16.08.2019–ம் தேதிய RDMA Group Whats App. செய்தி மற்றும் தொலைபேசி செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி கீழ்கண்டவாறு சாலைப் பணிகள் தேர்வு செய்து பொறியாளர்களால் விரிவான திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | பணியின் பெயர் | சாலையின் நீளம் (கி.மீ) | மதிப்பீடு (ரூ.லட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | இந்நகராட்சி 14–வது வார்டு மாதிஹுர் ரசூல் சாலை முதல் மாலாங்குண்டு வரை மற்றும் இந்நகராட்சி பள்ளமோர்க்குளம் புதிய உரக்கிடங்கிற்கு கிழக்கு கடற்கரை சாலை இணைப்பிலிருந்து தார்ச்சாலை அமைக்கும் பணிகள் | 2.700 | 200.00 |

மேற்காணும் விபரப்படி **ரூ.200.00** லட்சத்திற்கு சாலைப்பணிகள் மேற்கொள்வதற்கு நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒதுக்கீடு கோரும் பொருட்டு, சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு கருத்துரு அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**(கோப்பு எண். 455/2019/இ1)**

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டினை மன்றம் அனுமதிக்கலாம்
2. இந்நகராட்சி நிதிநிலமையைக் கருத்தில் கொண்டு மதிப்பீடு ரூ. 200.00 இலட்சத்தினை அரசு முழுமானியத்துடன் அனுமதிக்கும் பொருட்டு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்க மன்றம் அனுமதிக்கலாம்.

## <u>தீர்மானம் எண்.601 அனுமதிக்கப்பட்டது.</u>

## <u>பொருள் :2</u>

**இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அவர்களின் கடிதம் ந.க.எண். 207/செமதொ/2017, நாள்.31.08.2017ல் தெரிவித்துள்ளபடி, இந்நகராட்சியின் வளர்ச்சித் திட்டங்கள் மற்றும் சாதனைகள் மதுரைமணி தொழில்மலர் 2017–ல் விளம்பரம் செய்யப்பட்ட வகைக்கு கட்டணம் ரூ.26,000/–க்கு பட்டியல் எண்.2779 நாள். 21.12.2017–ன் படியானது இந்நகராட்சிக்கு 22.03.2018–ம் தேதி வரப்பெற்றுள்ளது. மேற்படி பட்டியல்**

ரூ.26000/—ஐ வழங்கும் பொருட்டு, மேற்காணும் நிறுவனத்தால் தொடர்ந்து கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. மேலும் சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதம் ந.க.எண்.16401/2018—எப்1, நாள்.01.08.2019ல் இப்பொருள் தொடர்பாக உரிய நடவடிக்கை மேற்கொள்ளமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி விளம்பரக் கட்டணம் பட்டியல் ரூ.26,000/— மட்டும் வழங்குவதற்கு மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.
(கோப்பு எண்.425/2017/இ1)

<u>அலுவலகக் குறிப்பு:</u>

மதுரைமணி நாளிதழ் விளம்பர கட்டணம் ரூ.26,000/—யை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
<u>தீர்மானம் எண்.602 அனுமதிக்கப்பட்டது.</u>

<u>பொருள் :3</u>

தூய்மை இந்தியா திட்டம் — திடக்கழிவு மேலாண்மை (Swatch Bharat mission - SWM) 2018—19 ஆம் ஆண்டு 7—வது மாநில உயர்மட்ட குழு கூட்ட நடவடிக்கையின்படி இந்நகராட்சிக்குட்பட்ட 21 வார்டுகளில் இருந்து பிரித்து எடுக்கும் குப்பைகளை அந்தந்த வார்டு பகுதிகளிலே தரம் பிரித்து உரம் தயாரிக்கவும், உரக்கிடங்கில் உள்ள குப்பைகளை பிரித்து எடுத்து உரமாக்கி கழிவுகளை அகற்றுவதற்கும் இரண்டு நுண் உரம் செயலாக்க மையங்கள் அமைப்பதற்கு ரூ.120.00 இலட்சமும் இந்நகராட்சிக்கு வீடு வீடாகச் சென்று குப்பைகளைப் பிரித்து எடுத்து சேகரிக்க மின்கலன் மூலம் இயங்கும் வாகனம் 9 எண்ணம் வாங்குவதற்கு ரூ.16.20 இலட்சமும், மற்றும் டிப்பர் ஆட்டோ 4—எண்ணம் வாங்குவதற்கு ரூ.22.40 இலட்சத்திற்கும் பணிகள் ரூ.158.60 இலட்சத்திற்கு மேற்கொள்ள சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் உத்திரவு ந.க.எண்.22866/2018/பி3 நாள்.23.08.2018ன்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அதனை தொடர்ந்து, 8—வது மாநில உயர்மட்ட குழு கூட்டத்தில், இந்நகராட்சிக்கு வீடு வீடாகச் சென்று குப்பைகளைப் பிரித்து எடுத்து சேகரிக்க மின்கலன் மூலம் இயங்கும் வாகனம் 13 எண்ணம் வாங்குவதற்கு ரூ.23.40 இலட்சமும், இந்நகராட்சி பழைய மற்றும் புதிய உரக்கிடங்கில் 9350 Cu.m ஏற்கனவே உள்ள குப்பைகளை பிரித்து எடுத்து உரமாக்கி கழிவுகளை அகற்றுதல் பணிக்கு ரூ.63.00 இலட்சமும், ஆக மொத்தம் ரூ.86.40 லட்சத்திற்கு பணிகள் சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ந.க.எண்.1191/பி3/2019 நாள்.21.01.2019—ன் படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேற்காணும் நிர்வாக அனுமதிகளின் அடிப்படையில் இந்நகராட்சி 21—வது வார்டு குடிநீர் மேல்நிலைத் தொட்டி அமைந்துள்ள வளாகத்தில் பொதுசுகாதார பயன்பாட்டிற்கு வாங்கப்படும் மின்கலன் வாகனம் (Battery Operating Vehicle) 22 எண்ணம் நான்கு சக்கர டிப்பர் ஆட்டோ (Four Wheeler Tipper Auto) 4—எண்ணம் வாகனங்களை பாதுகாப்பாக நிறுத்தி வைப்பதற்கும், மின்கலன் வாகனத்தின் பேட்டரி சார்ஜ் செய்வதற்கு மின்சாதனங்கள் அமைக்கும் பணிகள் செய்து தருமாறு இவ்வலுவலக துப்புரவு ஆய்வாளரால் கோரப்பட்டுள்ளது. அதனடிப்படையில் இந்நகராட்சிக்குட்பட்ட 21 வார்டுகளிலும் உள்ள தினமும் வீடு வீடாக சென்று குப்பைகளை சேகரிக்க மின்கலன் வாகனம் (Battery Operating Vehicle) 22 எண்ணம் வாங்கப்பட்டுள்ளதை நிறுத்தவும் (Battery Operating Vehicle Shed), மின்கலன் வாகனத்தின் பேட்டரி சார்ஜ் செய்வதற்கு பிளக் பாயின்ட்டுகள் அமைக்கும் பணிகளுக்கு ரூ.8,50,000/—க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேலும், இப்பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொள்ளவும் செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும், இந்நகராட்சிப் பொறியாளர்களால் அனுமதி கோரப்பட்டுள்ளது மன்றத்தின் முன்வைக்கப்படுகிறது.

(கோப்பு எண்.446 /2019/ இ1)

<u>அலுவலகக் குறிப்பு:</u>

1. பொறியாளர்களால் ரூ.8,50,000/—க்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டினை மன்றம் அங்கீகரிக்கலாம்.
2. வாகனங்கள் பாதுகாப்பை கருத்தில் கொண்டும், நிர்வாக நலன் கருதியும் இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.603 அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>பொருள் :4</u>**

கீழக்கரை நகராட்சியில் 21 வார்டுகள் உள்ளன. 2011—ம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி 38355 ஆகும். இராமநாதபுரம் காவேரி கூட்டு குடிநீர் திட்டத்தின் மூலம், இந்நகராட்சிக்குட்பட்ட கொந்தகருணை அப்பா தர்ஹா மணல்மேடு வளாகத்தில் ஒரு தரைமட்டத் தொட்டி அமைக்கப்பட்டுள்ளது. அதிலிருந்து இரண்டு மேல்நிலைத் தொட்டிகளுக்கு குடிநீர் ஏற்றப்பட்டு அதன் மூலம் இந்நகர் பொது மக்களுக்கு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. காவேரி கூட்டு குடிநீர் திட்டத்தின் மூலம் வழங்கப்படும் குடிநீர் எவ்வளவு வருகிறது என்ற அளவு தெரியாமலேயே ஒவ்வொரு மாதமும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் குறிப்பிட்டு வழங்கப்படும் கேட்பின் அடிப்படையில் இந்நகராட்சி மூலம் குடிநீர் கட்டணம் செலுத்தப்பட்டு வருகிறது. இதில் குடிநீருக்கான கட்டணம் அளவு மீட்டர் இல்லாமல் ஒவ்வொரு மாதமும் அதிகமாக இந்நகராட்சியிலிருந்து தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு தொடர்ந்து செலுத்தப்பட்டு வருவதாக கருதப்படுகிறது.

ஆகையால் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் இந்நகராட்சிக்கு வழங்கப்படும் குடிநீரினை அளவீடு செய்யும் பொருட்டு குடிநீர் அளவுமானி பொருத்த வேண்டி உள்ளது. அவ்வாறு பொருத்தினால் மட்டுமே மாதம் மாதம் எவ்வளவு குடிநீர் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் வழங்கப்படும் குடிநீரின் அளவு கணக்கீடு செய்து உரிய கட்டணத்தை செலுத்துவதற்கு ஏதுவாகவும், தற்போது செலுத்தி வரும் குடிநீர் கட்டணத்தையும் குறைக்கவும் வாய்ப்பு உள்ளது.

ஆகவே, இந்நகராட்சிக்கு காவேரி கூட்டு குடிநீர் திட்டத்தின் மூலம் வழங்கப்படும் குடிநீர் குழாய்களில் புதிதாக 6’’ அளவு மானி (Magnetic Flow Meter) பொருத்த ஆகும் உத்தேச செலவினம் ரூ.4,25,000/—க்கு பொறியாளர்களால் மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேலும், இப்பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொள்ளவும் செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளவும், இந்நகராட்சிப் பொறியாளர்களால் அனுமதி கோரப்பட்டுள்ளது மன்றத்தின் முன்வைக்கப்படுகிறது.

(கோப்பு எண். 692 /2019/ இ1)

<u>அலுவலகக் குறிப்பு:</u>

1. பொறியாளர்களால் ரூ.4,25,000/—க்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டினை மன்றம் அங்கீகரிக்கலாம்.
2. நிர்வாக நலன் கருதி காவேரி கூட்டு குடிநீர் திட்டத்தின் மூலம் வழங்கப்படும் குடிநீர் குழாய்களில், புதிதாக 6’’ அளவு மானி (Magnetic Flow Meter) பொருத்தும் பணிகள் செய்வதற்கு குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.604 அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>பொருள் :5</u>**

கீழக்கரை நகராட்சியில் 21 வார்டுகள் உள்ளன. 2011–ம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி 38355 ஆகும். இராமநாதபுரம் காவேரி கூட்டு குடிநீர் திட்டத்தின் மூலம், இந்நகராட்சிக்குட்பட்ட கொந்தகருணை அப்பா தர்ஹா மணல்மேடு வளாகத்தில் ஒரு தரைமட்டத் தொட்டி அமைக்கப்பட்டுள்ளது. அதிலிருந்து இரண்டு மேல்நிலைத் தொட்டிகளுக்கு குடிநீர் ஏற்றப்பட்டு அதன் மூலம் இந்நகர் பொது மக்களுக்கு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. காவேரி கூட்டு குடிநீர் திட்டத்தின் மூலம் வழங்கப்படும் குடிநீர் எவ்வளவு வருகிறது என்ற அளவு தெரியாமலேயே ஒவ்வொரு மாதமும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் குறிப்பிட்டு வழங்கப்படும் கேட்பின் அடிப்படையில் இந்நகராட்சி மூலம் குடிநீர் கட்டணம் செலுத்தப்பட்டு வருகிறது. இதில் குடிநீருக்கான கட்டணம் அளவு மீட்டர் இல்லாமல் ஒவ்வொரு மாதமும் அதிகமாக இந்நகராட்சியிலிருந்து தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு தொடர்ந்து செலுத்தப்பட்டு வருவதாக கருதப்படுகிறது.

ஆகையால் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் இந்நகராட்சிக்கு வழங்கப்படும் குடிநீரினை அளவீடு செய்யும் பொருட்டு குடிநீர் அளவுமானி பொருத்த வேண்டி உள்ளது. அவ்வாறு பொருத்தினால் மட்டுமே மாதம் மாதம் எவ்வளவு குடிநீர் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் வழங்கப்படும் குடிநீரின் அளவு கணக்கீடு செய்து உரிய கட்டணத்தை செலுத்துவதற்கு ஏதுவாகவும், தற்போது செலுத்தி வரும் குடிநீர் கட்டணத்தையும் குறைக்கவும் வாய்ப்பு உள்ளது.

ஆகவே, இந்நகராட்சிக்கு காவேரி கூட்டு குடிநீர் திட்டத்தின் மூலம் வழங்கப்படும் குடிநீர் குழாய்களில் புதிதாக 6'' அளவு மானி (Magnetic Flow Meter) பொருத்த ஆகும் உத்தேச செலவினம் ரூ.4,25,000/–க்கு பொறியாளர்களால் மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேலும், இப்பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொள்ளவும் செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளவும், இந்நகராட்சிப் பொறியாளர்களால் அனுமதி கோரப்பட்டுள்ளது மன்றத்தின் முன்வைக்கப்படுகிறது.

(கோப்பு எண். 692 /2019/ இ1)

<u>அலுவலகக் குறிப்பு:</u>

1. பொறியாளர்களால் ரூ.4,25,000/–க்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டினை மன்றம் அங்கீகரிக்கலாம்.
2. நிர்வாக நலன் கருதி காவேரி கூட்டு குடிநீர் திட்டத்தின் மூலம் வழங்கப்படும் குடிநீர் குழாய்களில், புதிதாக 6'' அளவு மானி (Magnetic Flow Meter) பொருத்தும் பணிகள் செய்வதற்கு குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.605அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>பொருள் :6</u>**

கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 5–ல் அமைந்துள்ள கிழக்குத் தெரு ஆட்டோ ஸ்டாண்ட் அருகில் உயர்மின் கோபுர விளக்குகள் (High Mast Light) அமைக்கப்பட்டு, இந்நகராட்சி மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது. மேற்படி, உயர்மின் கோபுர விளக்குகள் கடந்த இரண்டு வருடங்களாக எரியாத நிலையில் இருப்பதால் பொதுமக்களிடமிருந்து புகார்கள் வந்த வண்ணம் உள்ளன. உயர்மின் கோபுர மின்விளக்குகளில் ஏற்பட்டுள்ள டைமர் பேனல் பழுதுகள் மற்றும் மின்விளக்குகளை இறக்கி ஏற்றும் இரும்பு கயிறு (ரோப்) தன்மை இழந்துள்ளதையும்,

சரிசெய்து உயர்மின் கோபுரவிளக்குகளை நல்ல முறையில் எரிய வைப்பதற்கு இவ்வலுவலக மின்பணியாளரால் கோரப்பட்டுள்ளது. இந்நிலையில் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்கள் மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் ஆய்வுக் கூட்டங்கள் மற்றும் இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் ஆய்வுக் கூட்டங்களில் உள்ளாட்சி அமைப்புகளில் அனைத்து வார்டுகளில் உள்ள தெருவிளக்குகள் 100 சதவீதம் எரிய வைக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும் 05.08.2019–ம் தேதி இரவு சுமார் 8.00 மணியளவில் இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அவர்களால் இந்நகராட்சிப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள தெருமின் விளக்குகள் ஆய்வு செய்யப்பட்டது. அதில் இந்நகராட்சி பேருந்து நிலையம் இருள் சூழ்ந்து இருப்பதால் துரித நடவடிக்கை மேற்கொண்டு உயர்மின் கோபுர விளக்கினை உடனடியாக பழுதுநீக்கம் செய்து மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவர அறிவுறுத்தப்பட்டது. அதனடிப்படையில் மேற்காணும் உயர்மின்கோபுர விளக்குகளை பழுது நீக்கம் செய்து இந்நகர் பொதுமக்களின் புகார்களை நிவர்த்தி செய்யும் பொருட்டு ஆகும் உத்தேச செலவினம் ரூ.1,55,000/–ஐ இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளும் பொருட்டு இந்நகர்மன்ற அனுமதி பெறுவதற்கு இந்நகராட்சிப் பொறியாளரால் தெரிவிக்கப்பட்டுள்ளது மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.

(கோப்பு எண். 702 /2019/இ1)

அலுவலகக் குறிப்பு:

1. இந்நகர் பொதுமக்கள் நலனை கருத்தில் கொண்டும், மாவட்ட ஆட்சியரின் அறிவுரையின்படியும் பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
2. இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து ரூ.1,55,000/– செலவினங்கள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.606அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் :7**

அரசு ஆணை (MS) எண்.40 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.19.04.2018ன்படி, இந்நகராட்சிக்கு பொறியாளர் நிலை–III பணியிடம் புதிதாக தோற்றுவிக்கப்பட்டுள்ளது. அதன்படி இந்நகராட்சிப் பொறியாளருக்கென இவ்வலுவலகத்தின் பின்புறம் அமைந்துள்ள கூடுதல் கட்டிடத்தின் மேல்தளத்தில் அறை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்நகராட்சி பொறியியல் பிரிவின் மூலம் நடைபெறும் திட்டப்பணிகள், பொதுநிதிப் பணிகள் மற்றும் இதர பணிகளை செயல்படுத்துவதற்கு மதிப்பீடுகள் தயார் செய்யவும், தலைமை பொறியாளர் மற்றும் மண்டல செயற்பொறியாளர் அவர்களின் ஆய்வுக் கூட்டங்களுக்கு அறிக்கைகள் அனுப்பவும், கணினி மூலம் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யவும், திட்டப்பணிகள் தொடர்பாக சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் மற்றும் மதுரை, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் ஆய்வுக் கூட்டங்களுக்குரிய புள்ளி விபரங்கள் தயார் செய்யவும், இந்நகராட்சி பொறியாளர் அறை மற்றும் பொறியியல் பிரிவிற்கு தற்போது தேவையான 2 எண்ணம் டெக்ஸ்டாப் கணினி, 2 எண்ணம் டி.வி.டி. ரைட்டர்ஸ், 1 எண்ணம் கலர் பிரிண்டர் மற்றும் 1 எண்ணம் லேசர் பிரிண்டர் வாங்கித் தருமாறு இவ்வலுவலக பணிமேற்பார்வையாளரால் கோரப்பட்டுள்ளது.

மேலும், இந்நகராட்சிப் பொறியியல் பிரிவிற்குத் தேவையான கணினி உபயோக பயன்பாட்டிற்குரிய பொருட்கள் வாங்குவதற்கு ரூ.2,50,000/–க்கு பொறியாளர்களால் மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேலும், இப்பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொள்ளவும் செலவினத்தை இந்நகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து

மேற்கொள்ளவும், இந்நகராட்சிப் பொறியாளர்களால் அனுமதி கோரப்பட்டுள்ளது மன்றத்தின் முன்வைக்கப்படுகிறது.

<u>(கோப்பு எண். 703 /2019/இ1)</u>

<u>அலுவலகக் குறிப்பு:</u>

1. நிர்வாக நலனை கருத்தில் கொண்டு பொறியாளர்களால் ரூ.2,50,000/—க்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டினை மன்றம் அங்கீகரிக்கலாம்.

2. இந்நகராட்சிப் பொறியியல் பிரிவிற்குத் தேவையான கணினி உபயோக பயன்பாட்டிற்குரிய பொருட்கள் ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொண்டு வாங்குவதற்கும், அதற்குரிய செலவினங்களை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

<u>தீர்மானம் எண்.607 அனுமதிக்கப்பட்டது.</u>

ஒம்/— ஆ. தனலெட்சுமி,பி.காம்
தனி அலுவலர் / ஆணையாளர்(பொ)
கீழக்கரை நகராட்சி.

/ உண்மை நகல் /

ஆணையாளர் (பொ)
கீழக்கரை நகராட்சி.